# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,906—1970 මැයි 15 වැනි සිකුරාදා—1970.5.15

14,906 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 163 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 163 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 168 |
| துணை விதிகள் .. .. .. | 168 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 169 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### நாவலப்பிட்டி நகர சபை

**நகர சபைகள் கட்டளைச் சட்டம்**

**1970 க்கான விசேட தண்ணீர் வரி**

(255 ம் அதிகாரமாம்) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ) என்னும் பிரிவின்படியும், அப்பிரிவினால் அன்னாருக்கு அளிக்கப்பட்ட தத்துவபலங்களைக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய அனுமதியுடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியனவாய வரம்புகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் அமைவாகவும் நாவலப்பிட்டி நகரத்தினுள் அமைந்துள்ள நிலையான ஆதனங்கள் சகலவற்றினதும் வருடாந்தப் பெறுமதியில் நூற்றுக்கு நான்கு வீதமானதும், முறையே மார்ச்சு 31, ஜூன் 30, செத்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தற்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1970 ம் ஆண்டுக்கு நாவலப்பிட்டி நகர சபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு எப்பிரல் மீ 25 ந் உ.

5-195—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## பதவிகள்—வெற்றிடம்

### இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

1. **படிகள்.**—வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி வீட்டு வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிக விசேட வாழ்க்கைப்படி ஆகியவை அரசாங்க விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கொடுக்கப்பட்டுள்ளன.

2. **சேவை நிபந்தனைகள்.**—உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் (அதிகாரம் 264) ஏற்பாடுகளுக்கும், அவற்றினது திருத்தங்கள் ஏதனிற்கும், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களுக்கும், காலத்துக்குக் காலம் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்படும் மற்றைய சேவை நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாய் நியமனங்கள் அமையும்.

3. **வேலைக்கமர்த்துவதற்கான நியதிகள்.**—1952 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 8 ஆம் திகதி வெளியான 10,432 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்ட பதவிகளும் அவற்றோடு காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றிச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின்கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரியனவாகும்.

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

(அ) அரசாங்கத்தின் கீழ் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள் இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 ஆம் பிரிவின்கீழ் விடுதலை செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சேவையின் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு மாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாத்துக் கொடுக்கப்படும்.

(ஆ) உள்ளூராட்சித் தாபனங்களின், அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும்போதும் கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1949 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைத் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டுள்ளவாறுள்ள 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கிணங்க உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(இ) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் 1952 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30 ஆம் திகதி வெளியான 10,329 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குத் தங்கள் சம்பளத்தில் 4 சத விகிதத்தைச் செலுத்தவேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஈ) நியமிக்கப்படுபவர்கள், குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு உரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறி கொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(உ) உள்ளூராட்சிச சேவையின், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைய விடயமாக முறையான தகைமைபெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(ஊ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம், பொதுவாக மூன்ருண்டு காலத்துக்குத் தகுதிகாண் நிலையில் அல்லது அதற்கப்பால் உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டதாக அமையும்.

(எ) விண்ணப்பிப்பவர்கள் தங்கள் வயதுக்கத்தாட்சியாக தமது பிறப்புப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். சத்தியக் கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்ப் பிரதிகள் சேர்த்து அனுப்பப்படாவிட்டால் விண்ணப்பிப்பவர்கள் அருகதையற்றவர்களாகக் கருதப்படுவர்.

**4. புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) எப்பதவிக்கேனும் நீடிய காலம் விதிக்கப்பட்டாலன்றி, காரியத்துக்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில், இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்" களின் தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த காலம் இரண்டு ஆண்டுகளாயிருக்கும்.

(ii) "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்தற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்குமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகள் எதற்கும் அமைந்தொழுகுமாறு வேண்டப்படுவர்.

(iii) (அ) இந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகாண் நிலை பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) தகுதிகாண் நிலை பரீட்சார்த்த காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை, பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிகாண் பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்தாயிருக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியடையத்தவறினால் வேதனப் பெருக்கு இடைநிறுத்தப்படும். குறிப்பிட்ட காலவரையறையையும் கடந்த நீடித்த காலவரையறையுள் சித்தியடையத் தவறினால், வேதனப் பெருக்கின் இடைநிறுத்தம் பூரணமாகவே நிறுத்தப்பட்டதாகிவிடும். பரீட்சை சித்தியடையும் காலம்வரை இப்பூரண நிறுத்துகை செயற்படும். (13,387 இலக்கத்தையும், 9.11.62 தேதியையும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை உத்தியோக கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்).

**(இ) கல்வியும் ஏனைய தகைமைகளும்**

சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக்குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லா சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற சிங்களப் பரீட்சார்த்தி சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான பரீட்சையில், சிங்கள மொழியில் அல்லது அதற்குச் சமமானதில், சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ந் தேதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவையில் உள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெற விரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

**(ஈ) வினைத்திறமைகாண் தடைகள்**

புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்களுக்கு, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில், சிங்கள மொழியில் விதிக்கப்பட்ட வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டியிருக்கும். சித்தியடையத் தவறினால் உத்தியோகத்தரின் வேதனப் பெருக்கம் முதல் இடைநிறுத்தப்படும். இரண்டாவதாக நிறுத்தப்படும், அதன்பின் பின்போடப்படும்.

(iv) சிங்கள மொழிமூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் நடக்கும் தேர்ச்சிகாண் பரீட்சையிலிருந்து தவிர்த்துவிடப்படுவர்.

(v) தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த கால முடிவில், சிங்களத்தில் விதித்த தேர்ச்சிகாண் தரத்தை எய்தமுடியாவிட்டால், உள்ளூராட்சி சேவை நிபந்தனைகள் 21 ஐதும் 22 ஐதும் ஏற்பாடுகள் பொருத்தமாகும்.

"(மேற்சொன்ன (iii) (அ), (ஆ) (iv) ஆகியவை, தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்க்கப்பட்டவர்களுக்கே பொருத்தமாகும்)."

**குறிப்பு.**—(1) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் எனப் பொருள்படுகின்றது.

(2) மேற்கண்ட பந்தி 4 (3) (அ) (ஆ) (ஈ) இல் உள்ள ஏற்பாடுகள் அரசாங்கத் திணைக்களங்களில் சேவிக்கும் "பழைய சேர்வு உத்தியோகத்தர்களும் உள்ளூராட்சிச் சேவையில் நியமனங்களை ஏற்றுக் கொள்வதற்குத் தமது பதவிகளில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுமான உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தா."

**5. வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதையும் திருப்திகரமாக நிரூபிக்கவேண்டும். உள்ளூராட்சிச் சேவைக்கு ஆட்சேர்த்தல் பற்றிய சகல தேவைகட்கும் "இலங்கையர்" என்னும் பதத்திற்கு வம்சாவழியில் அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாகவுள்ளவர் என்று வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

**6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை**

(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவைசெய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத்திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக்குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக்குறைவான பரீட்சையைத் தமது மிகக்குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

**7. வயதுச் சலுகை.**—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தர பதவிகள் வகிக்கும் உள்ளூராட்சிமன்ற ஊழியர்கள், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

**8. வேண்டற்பால ஏனையவை.**—(i) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகர சங்க அதிகாரி அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள். அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும் அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில் விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன்பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா,

(iv) அபேட்சகர் ஒருவரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரும் ஒரு நுணச் சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தேர்ந்தெடுப்பதற்கு எவ்விதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(v) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும். தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(vi) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுபவைவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vii) " கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்படவேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக் கூடாது "

(viii) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணாமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

**வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய**

**விண்ணப்ப மாதிரிப் பத்திரம்**

**உள்ளூராட்சிச் சேவை**

**முக்கியமாகக் கவனிக்க.**—(i) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை, தபாற் பெட்டி 530, கொழும்பு 1 என்ற விலாசத்தை அடையும்வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(ii) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களைச் சித்தஞ்செய்யுமுன்னர் மேற்போந்த பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பகாரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்க வேண்டும்.

(iii) விண்ணப்பகாரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும் :—(1) பிறப்புச் சான்றிதழ் (2) ஆங்கிலத்தில்–சிங்களத்தில்–தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (3) குணச் சான்றிதழ், (4) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்–தொழில்நுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(iv) விண்ணப்பகாரர்கள் மேற்போந்த பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

.......................................பதவிக்கான **விண்ணப்பம்**

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————
   (ஆ) ............................பதவிக்கான விண்ணப்பம்
   முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.

2. தேசிய இனம் :————.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா இலங்கையரல்லாதாரா என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக)

3. தபால் விலாசம் :————.
   (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்).

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :————.
   .....வருடங்கள் ......மாதங்கள் ........நாட்கள்
   (ஆ) பிறந்த திகதி :————.

5. பிறந்த இடம் :—
   (அ) விண்ணப்பகாரர் :————.
   (ஆ) அவரது பிதா :————
   (இ) அவரது பிதாவழிப்பேரன் :————.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.

   (விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்)

6. விவாகமானவரா, தனியாளரா, தாரமிழந்தவரா அல்லது கைம்பெண்ணா :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்–தொழில்நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1.......... | .......... | .......... | 1.......... | .......... | .......... |
| 2.......... | .......... | .......... | 2.......... | .......... | .......... |
| 3.......... | .......... | .......... | 3.......... | .......... | .......... |
| 4.......... | .......... | .......... | 4.......... | .......... | .......... |
| 5.......... | .......... | .......... | 5.......... | .......... | .......... |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் :————.
   (அ) சிங்களம் :————.
   (ஆ) ஆங்கிலம் :————.
   (இ) தமிழ் :————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில்நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. கல்வி பயின்ற பாடசாலையும் அதைவிட்ட திகதியும் :————.

11. பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) :————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின் சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக :————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :————.

(i) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(ii) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(iii) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? :————.

(ஊ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும், பேச்சை மொழி பெயர்க்கும் தேர்ச்சியுண்டா ?

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இவை இரண்டும் உமக்குண்டா? உண்டெனில் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக) :—

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா? உண்டெனில் அவ்வழக்கின் திகதியையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா? இல்லையாயின் எவ்வளவுக்கு கடனாளியாக இருக்கின்றீர் :————.

16. வேறு ஏதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச்சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல்வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியதில்லை :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும் நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு ஏதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————.
திகதி :————. விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530.கொழும்பு 1.

---

## உள்ளூர் ஆட்சிச்சேவை

### நிருமாணசிற்பி—கொழும்பு மாநகரசபை— கொழும்பு

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி முதலில் உடனடியாகக் கொழும்பு மாநகரசபைக்கு நியமிக்கப்படுவார்.

2. **வேதன அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய வேதனம் வருடாந்தம் ரூபா 8,160—8 × 360 + 480—ரூபா 16,320. வருடாந்தம் ரூபா 11,040 பெறுமுன்னரும் ரூபா 14,880 பெறுமுன்னரும் வினைத் திறமைகாண் தடையுண்டு. ஒரு தகுதியான பரீட்சார்த்தி அவருடைய தகைமைகளுக்கும் அனுபவங்களுக்கும் ஏற்றவாறு இவ்வேதனத் திட்டத்தின் ஒருபடியில் நியமிக்கப்படுவார். மணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் வீதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் ஏற்ப ஒரு திருமணப்படியும் வழங்கப்படும்.

3. **வேண்டிய தகைமைகள்**

(அ) வயது 2.6.70 ல 50 வயதிற்கு மேற்படக்கூடாது ;

(ஆ) விண்ணப்பதாரர்கள் பிரித்தானிய நிருமாண சிற்பிகள் அரச நிலையத்தின் (ரோயல் இன்ஸ்ரிரியூட் ஒப் பிரிட்டிஸ் ஆக்கிக்ரெக்) கூட்டுறுப்பினர் தகைமையையோ அல்லது அதற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையையோ பெற்றிருத்தல் வேண்டும்.

4. இவ்வர்த்தமானியின் IV ம் பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு, 2.6.70 ந திகதிக்குப் பிந்தாமல் உ. ஆ. சே. செயலாளருக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

6. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம், விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

டி. விஜேசிங்க,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

த. பெ. 530,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 29 ந வ.

5-355—15.5.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### உணவுப் பரிசோதகர் பதவி

உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பொது சுகாதாரப் பரிசோதகர்களிடமிருந்து உள்ளூராட்சிச் சேவையிலுள்ள உணவுப் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபையினால் கோரப்படுகின்றன.

2. **திரட்டிய வேதன அடிப்படை.**—வருடாந்தம் ரூபா 5,736—6,144—8 + 180—6 × 240—ரூபா 9,480. இலவச கோலவுடைகள் தரப்படும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—இறைச்சியும் மற்றைய உணவுகளுக்கான ரோயல் சுகாதார ஸ்தாபனத்தின் (இங்கிலாந்து) சான்றிதழ்கள் விண்ணப்தாரர்களிடம் இருத்தல் வேண்டும்.

4. இவ்வர்த்தமானியின் IV வது பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைத் தயவுசெய்து பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும். 2.6.70 க்குப் பிந்தாமல் விண்ணப்பங்கள் எனக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அல்லது அது சம்பந்தமான தொடர்புகள், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். இத்திணைக்களத்திலுள்ள எந்த ஒரு உத்தியோகத்தருக்கும் நேரடியாக அனுப்பப்படக்கூடாது. குறிப்பிட்ட இப்படிவத்திலுள்ள பின்வரும் அம்சங்கள் பதிலாகச் சேர்க்கப்பட வேண்டும் :—

" 11 (ஏ)—தற்போதைய ஊழியம்,

(1) இறைச்சியும் மற்றும் உணவுகளுக்குமான ரோயல் சுகாதார ஸ்தாபனத்தின் சான்றிதழைப் பெற்ற திகதி.

(2) தற்போதைய வேதனமும், வேதன அடிப்படையும்,

(3) உள்ளூராட்சி மன்றங்கள் அல்லது அரசாங்கத்தின் கீழ் ஊழியஞ் செய்யப்பட்ட பதிவுகள், வகித்த பதவிகளும், காலப்பகுதியும் இவற்றைத் தருக. 17—நீக்கப்பட வேண்டும்."

6. விண்ணப்பம் தபாலிற் காணுமற் போய்விட்டது அல்லது தாமத மாகிவிட்டது என்ற சாட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசி நாட்கள் வரைக்கும் தமது விண்ணப்பங்களைத் தாமதிப்பவர்கள் தமது இழப்பி லேயே அவ்விதம் செய்பவர்களாவர்.

7. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இவ்வலுவலகத்தில் கிடைக்கும் விண்ணப்பங்கள், அவை குறிப்பிட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைத்தன என்று உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் அல்லது தலைவர், தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைத் காட்டி, விண்ணப் பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்தாலன்றி அவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

டி. விஜேசிங்க,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

த. பெ. 530,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மே மீ 2 ந வ

5-356—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### புள்ளி விபர வல்லார் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபையினுல் கோரப்படுகின்றன.

2. **வேதன அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருடாந்தம் ரூபா 6,720—360×12—480×11—ரூபா 16,320 ஆகும். வருடாந்தம் ரூபா 11,520 பெறுமுன்னரும், ரூபா 14,880 பெறுமுன்னரும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையுண்டு.

3. **வேண்டிய தகைமைகள்.**—பரீட்சார்த்தி கீழ்க்கண்ட தகைமைகளை யுடையவரென்பதற்குத் திருப்திகரமான சான்றுகளை அளித்தல் வேண்டும்.

(அ) அவர் சிறந்த நல்லொழுக்கமும், உடல்நலமும் உடையவர் என்பதற்கு.

(ஆ) 2.6.70 ல் அவர் 22 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் உள்ளது என்பதற்கு (உள்ளூராட்சிச் சேவையி லுள்ளவர்களுக்கு கூடியவயதெல்லை பொருந்தமாட்டாது).

(இ) கீழ்க்கண்ட பாடங்களில் ஏதாவதொன்றில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் அளிக்கப்பட்ட 1 ம் அல்லது 2 ம் வகுப்புச் சிறப்புப் பட்டம் அல்லது இவற்றிற்கு மேற்பட்ட உயர்தர பட்டம் பெற்றிருக்க வேண்டும்:—புள்ளிவிவரவியல் கணிதம், பொருளியல், குடிநிலைப்புள்ளிவிபர இயல், சமூகவியல், மனிதரியல்.

4. இவ்வர்த்தமானியின் 4 ம் பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங் களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப் படுகின்றது.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு, 2.6.70 ந் திகதிக்குப் பிந்தாமல் செயலாளருக்குக்கிடைக்கும்படி அனுப்பப் பட வேண்டும்.

6. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங் கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தி யோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது இதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித் திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சிமன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

டி. விஜேசிங்க,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 29 ந வ.

5-357—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### தரம் I, பொருத்துபவர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினுல் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி முதலில் உடனடியாகக் கண்டி மாநகரசபைக்கு நியமிக்கப்படுவார். அவர் இடமாற்றத்துக்கு உரியவ ராவதோடு இத்தீவின் எப்பாகத்திலேனும் கடமையாற்ற ஆயத்தமாக இருத்தல் வேண்டும்

3. **வேதனம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருமாறு.— வருடாந்தம் ரூபா 3,120—14×60—ரூபா 3,960. வருடாந்தம் ரூபா 3,480 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு. மணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் வீதங்களுக்கும் நிபந்தனை தளுக்கு மிணங்க ஒரு திருமணப் படியும் கொடுக்கப்படும்.

4. **வேண்டிய தகைமைகள்.**—

(அ) 2.6.1970 ல் விண்ணப்பதாரர்கள் 40 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். இவ்வயதெல்லை உள்ளூராட்சிச் சேவை உறுப்பினர் களுக்கும், சபைகளின் ஊழியர்களுக்கும் பொருந்தமாட்டாது ;

(ஆ) விண்ணப்பதாரர்கள், 3" இருந்து 25" விட்டமுள்ள வார்ப் பிரும்புக் குழாய்களை ஈய, டைடன், பொறிமுறைப் பொருத்துக் களுடன் போடுவதிலும், குடிநீர் ஊற்றுக்களிலுள்ள வால்வுகள், தியணைநீரூட்டிகள், காற்றுவால்வுகள், வற்றுவால்வுகள், நிலைத் தூண்கள் போன்ற விசேட அமைப்புகளை இணைத்தலிலும் திருத்துவதிலும் அத்தோடு பி. வி. ஸி. இணைப்புகள் உள்ள பி. வி. ஸி. குழாய்களைப் போடுவதிலும், ஒரு உள்ளூராட்சி மன்றத்திலோ அல்லது அரசாங்கத்திணைக்களத்திலோ அல்லது ஒரு நன்கு மதிக்கப்பட்ட நிறுவனத்திலோ, குறைந்தது 10 வருட அனுபவமாவது பெற்றிருத்தல் வேண்டும் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

தகுதியான பரீட்சார்த்திகள் ஒரு செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றும்படி வேண்டப்படலாம்.

5. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் 4 வது பகுதியில் உள்ள, உள்ளூர் ஆட்சி சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் நிரப்பியனுப்பப்பட வேண்டும். 2.6.1970 ம் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

7. விண்ணப்பங்கள், செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை த. பெ. 530, கொழும்பு, என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த ஒரு உத்தியோகத்தருக்கும் நேரிடையாக அனுப்பப்படக்கூடாது.

8. உள்ளூராட்சிச் சேவையில் வேலை பார்க்கும் உத்தியோகத்தரிட மிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

டி. விஜேசிங்க,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
த. பெ. 530,
கொழும்பு 1,

5-358—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906.

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உள்ளூராட்சிச் சேவை

**பொது சுகாதார பரிசோதகர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2.10.1969**

மேற்கூறிய பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் கீழ்க்காணும் பரீட்சார்த்திகள் சித்தியடைந்துள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகிறது :—

1. அல்மேடா, ரி. சி. .. .. கொழும்பு மா. ந. ச.
2. டி சில்வா, பி. வி. ஜி. .. வத்தளை ந. ச.
3. மைலேவா, ஆர். பி. .. மாத்தளை மா. ந. ச.
4. விமலசிறி, டபிள்யூ. டி. ரி. .. நாவலப்பிட்டி மா. ந. ச.

செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

த. பெ. 530,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மே மீ 6 ந் உ.

5-364—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## உள்ளூராட்சிச் சேவை

**தரம் 5, செயலாளர் சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சை — 17.9.69**

மேற்கூறிய பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் கீழ்க்காணும் பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் :—

1. பியரத்ன, டி. வி. .. .. மீகொடபொத்தபத்து கி. ச.
2. விஜேசிங்ஹ, எம். ரி. பி. .. ஹொரண ந. ச.
3. அபயவர்த்தன, டபிள்யூ. எஸ். பி. .. கொழும்பு மா. ந. ச.
4. ரணவாக்க, டபிள்யூ. .. குளியாப்பிட்டிய ந. ச.
5. சிவபாதசுந்தரம், ஏ. .. கல்முனை ப. ச.

செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

த. பெ. 530,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மே மீ 6 ந் உ.

5-363—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

# துணைவிதிகள்

## அம்பலாங்கொடை நகர சபை

**நகர சபைகள் கட்டளைச் சட்டம்**

(255 ம் அதிகாரமாம்) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் அம்பலாங்கொடை நகர சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவினால் அன்னாருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு எப்பிறல் மீ 19 ந் உ.

### கறுவாப்பட்டைக்குப் புகையூட்டுதல் சம்பந்தமான துணைவிதிகள்

1. சபைத் தலைவரிடமிருந்து அதன் பொருட்டுப் பெற்ற உத்தரவுப் பத்திரமின்றி, கறுவாப்பட்டைக்குப் புகையூட்டுதல் ஆகிய தொழிலை எவராவது நகர சபைப் பிரதேசத்திலுள்ள எம்மனையகத்திலும் செய்தல் கூடாது.

2. 1 ம் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உத்தரவுப் பத்திரமும், அது 15 ம் துணைவிதியின் கீழ் முன்னரே வழக்கழிக்கப் பட்டாலன்றி, அது எவ்வருடஞ் சம்பந்தமாக வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசம்பர் 31 ந் தினத்தன்று காலாவதியாகும்.

3. (1) அக்கருமத்துக்காக உபயோகிக்கப்படவிருக்கும் மனையகம் அப்பிரதேச வைத்திய சுகாதார உத்தியோகத்தராலோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவராலுமோ அங்கீகரிக்கப்பட்டாலன்றி உத்தரவுப்பத்திரமெதாவது 1 ம் துணைவிதியின் கீழ் வழங்கப்படுதல் ஆகாது.

(2) கறுவாப்பட்டைக்குப் புகையூட்டும் கருமத்துக்காக உபயோகிக்கப்பட விருக்கும் அறையோ அல்லது அறைகளோ பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருந்தாலன்றியும் அத்தகைய மனையகம் ஏதாவது அங்கீகரிக்கப்படுதலாகாது.

(அ) அத்தகைய அறை ஒவ்வொன்றினதும் சுவர்கள் 9 அடிக்குக் குறையாத உயரமுடையனவாகவும் செங்கல்லினால், கல்லினால் அல்லது கபூக்கல்லினால் கட்டப்பட்டதாகவுமிருப்பதோடு, தீராந்தியின் மட்டம்வரையுள்ள சுவர்களின் உட்புரப்பு முழுவதும் சீமெந்தினால் மெழுகப்பட்டோ அல்லது நீர்சுவறாத வேறு பொருட்களைக் கொண்டு ஆக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(ஆ) அடித்தளம் சீமெந்திடப்பட்டோ அல்லது நீர்சுவறாத ஒரு மேற்பரப்பைக் கொண்டதாகவோ இருத்தல் வேண்டும்.

(இ) கரையினூடாகவோ அல்லது கூரைக்கும் தீராந்திக்குமிடையிலுள்ள எந்த இடைவெளியினூடாகவுமோ வாயு, ஆவி, புகை அல்லது தீங்கான பொருட்கள் வெளியேறுவதைத் தடுக்கக்கூடியவகையில் கூரை சீமெந்துக் கொங்கிறீற்றினால் அல்லது வேறு நிலைத்திருக்கக்கூடிய பொருளினால் கட்டப்படுதல் வேண்டும்.

(ஈ) அந்த அறை அல்லது அறைகளில் கூரைக்கூடாக அல்லது தலைவர் காட்டுகின்றவண்ணம் அமைக்கப்பட்டதுமான ஒரு புகைபோக்கி அல்லது புகைக்குழாய் வைக்கப்பட்டிருக்கவேண்டும். அத்தகைய புகைக்குழாய் அடிப்புகைப்போக்கி 6 அங்குலத்துக்குக் குறையாத விட்டமுள்ளதும் நிலத்திலிருந்து 60 அடிக்குக் குறையாத உயரமுள்ளதுமாக இருத்தல் வேண்டும்.

(உ) அறை ஒவ்வொன்றினதும் கதவு அல்லது கதவுகள் மூடும்போது காற்றுப்புகாவண்ணமிருக்கத்தக்கதாக நெருக்கமாக பொருத்தப் பட்டபலகைகளை அல்லது வேறு சுவறக்கூடாத பொருட்களைக் கொண்டு அமைக்கப்படவேண்டும்.

(ஊ) அம்மனையகத்தில் போதியளவு வடிகால் வசதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(எ) ஊழியர்களின் உபயோகத்துக்காக ஒவ்வொரு 10 ஊழியருக்கு ஒரு கூடம் என்ற விகிதப்படி அம்மனையகத்தில் மலசலகூட வசதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஏ) புகையூட்டும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் கழுவுதற்கும் குளித்தற்கும் அம்மனையகத்தில் போதிய வசதிகள் செய்யப் பட்டிருத்தல் வேண்டும். புகையூட்டும் பணியில் ஈடுபட்டுள்ள எல்லா ஊழியர்களுக்கும் அத்தொழிலினால் ஏற்படக்கூடிய சகலவித ஆபத்துக்களுக்கும் காப்பாக காப்புறுதி வழங்கி அதற்குரிய சான்றை, உத்தரவுப்பத்திரத்துக்கு விண்ணப்பம் செய்யும்போது தலைவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஐ) அம்மனையகம் வாழிடமல்லாத ஒரு இடப்பகுதியில் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

(ஒ) அம்மனையகம், வாழிடமல்லாத எவ்விடப்பகுதியிலாவதிருக்கும் எவ்வாழ்மனையிலிருந்தும் குறைந்தது 100 யாருக்கப்பாலிருத்தல் வேண்டும்.

4. புகையூட்டும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் நச்சுவாயுவை, ஆவியை அல்லது புகையைச் சுவாசிப்பதைத் தடுத்தற்குகந்த முகமூடிகளும் கண்களுக்கு ஏதும் ஊறுவிளைவதைத் தடுத்தற்கான கண்கவசங்களும் அவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

5. புகையூட்டும் பணியில் ஈடுபட்டுள்ள எல்லா ஊழியர்களுக்கும் அத்தொழிலினால் ஏற்படக்கூடிய சகலவித ஆபத்துக்களுக்கும் காப்பாக காப்புறுதி வழங்கி அதற்குரிய சான்றை, உத்தரவுப்பத்திரத்துக்கு விண்ணப்பம் செய்யும்போது தலைவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

6. உத்தரவுப்பத்திரக்காரர் ஒவ்வொருவரும் தமது பெயரும் உத்தரவு பெற்ற அருவருப்பான தொழில் என்ற சொற்களும் சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் தெளிவாக வர்ணத்தால் எழுதப்பட்ட ஒரு பலகையை தமது மனையகத்துக்கு வெளியே துலக்கமான ஒரு இடத்தில் மாட்டிவைத்தல் வேண்டும்.

7. உத்தரவுப்பத்திரகாரர் ஒவ்வொருவரும் கறுவாப்பட்டைக்குப் புகையூட்டுதல்பற்றிய இத்துணைவிதிகளின், சிங்கள, தமிழ், ஆங்கிலப் பிரதியொன்றையும் உத்தரவுப் பத்திரத்தையும் சட்டத்திலிட்டு, உத்தரவு பெற்ற மனையகத்தின் நன்குகத் தெரியக்கூடிய ஒரு இடத்தில் தொங்கவிடச் செய்வதோடு எல்லா ஊழியர்களினதும் பெயர்களும், முகவரிகளுமடங்கிய ஒரு பட்டியலையும், தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரும் நியாயமான எந்நேரத்திலும் பார்வையிடக்கூடியதாக அம்மனையகத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

8. கறுவாப்பட்டைக்குப் புகையூட்டுதற்கான உத்தரவுப்பத்திரகாரர் ஒவ்வொருவரும் அக்கருமத்துக்குத் தேவைப்படும் பொருட்கள் அனைத்தையும் எவ்விதத் தொல்லையும் விளைக்காதவகையில் சேகரித்துவைத்திருத்தல் வேண்டும்.

9. கறுவாப்பட்டைக்குப் புகையூட்டுதற்கான உத்தரவுப்பத்திரகாரர் ஒவ்வொருவரும் சகல கழிவுகள், சாம்பல், நூர்த்தொதுக்கிய, வழித் தொதுக்கிய பொருட்களையும் வேறு கழிவுப் பொருட்கள் அனைத்தையும் எவ்விதத் தொல்லையும் விளைக்காத வகையில் தினமும் அம்மனையகத்திலிருந்து அகற்றி, அப்புறப்படுத்தச் செய்தல் வேண்டும்.

10. கறுவாப்பட்டைக்குப் புகையூட்டுதற்கான உத்தரவுப்பத்திரகாரர் எவரும் நதி, அருவி, கால்வாய், வாய்க்கால், கிணறு, குளம் எதுவும் அல்லது திறந்த நீர்நிலை எதுவும் அத்தொழிலுக்குரிய பொருட்களினுலோ, இனைப் பொருட்களினுலோ அல்லது கழிவுப் பொருட்களினுலோ அல்லது அத்தொழில் அமர்த்தப்பட்டுள்ள எந்த ஆளினுலுமோ அழுக்கடையவிடக்கூடாது.

11. ஒவ்வொரு உத்தரவுப்பத்திரகாரரும் அம்மனையகத்தின் அடித்தளத்தை நாளாந்தம் துப்பரவாக்கச் செய்தல் வேண்டும்.

12. ஒவ்வொரு உத்தரவுப்பத்திரகாரரும் அம்மனையகத்திலுள்ள வடிகால்களை நாளாந்தம் நன்னிலையில் வைத்துப்பேணவும், துப்பரவாக்கவும் செய்தல் வேண்டும்.

13. ஒவ்வொரு உத்தரவுப்பத்திரகாரரும் ஊழியர்களுக்கு அபாயமோ பொதுமக்களுக்குத் தொல்லையோ விளையாதவண்ணம், அம்மனையகத்தின் தளம், சுவர்கள், கூரை, கதவுகள், சன்னல்கள், புகைபோக்கிகள் ஆகியவற்றை முறைப்படி செப்பனிட்டு நன்னிலையில் வைத்துப் பேணிவரல் வேண்டும்.

14. உத்தரவுப்பத்திரகாரர் எவரும் முற்பகல் 4 மணிக்கும் பிற்பகல் 9 மணிக்குமிடைப்பட்ட நேரத்தில் எந்தவிதமான புகையூட்டும் வேலையையும் செய்தல் கூடாது.

15. தலைவரோ அல்லது தலைவரால் பொதுவாக அல்லது விசேடமாக அதனிமித்தம் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் உத்தியோகத்தர் எவருமோ நியாயமான எந்நேரத்திலுமோ அல்லது புகையூட்டுதல் நடைபெற்றுக்கொண்டிருக்கையிலோ, கறுவாப்பட்டைக்குப் புகையூட்டும் கருமம் எதுவும் நடைபெறும் மனையகத்துள் பிரவேசித்து அதனைப் பார்வையிடுதல் சட்டபூர்வமானதாகும். உத்தரவுப்பத்திரகாரரோ அல்லது பொறுப்பாக உள்ளவரோ அவ்விதம் பார்வையிடுவதை அனுமதித்தல் வேண்டும்.

16. கறுவாப்பட்டைக்குப் புகையூட்டுதல் பற்றிய இத்துணைவிதிகளில் எதனையும் மீறுகின்ற எச்செயலும் இருநூற்றியம்பது ரூபாவுக்கு மேற்படாத ஒரு அபராதத்தினுலும் குற்றஞ் சாட்டப்பட்ட பின்னரோ அல்லது அத்தகைய மீறுகையை கவனத்துக்குக் கொணர்ந்து தலைவரோ அல்லது தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரோ எழுத்து மூலமான அறிவித்தலொன்று கொடுத்த பின்னரோ தொடர்ந்தும் மீறும் ஒரு சந்தர்ப்பத்தில் தொடர்ந்து மீறப்படும் ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தியைந்து ரூபாவுக்கு மேற்படாத மேலதிகமான ஒரு அபராதத்தினுலும் தண்டிக்கப்படக்கூடியதாகும்.

17. தக்க நியாயாதிக்கமுள்ள ஒரு நீதிமன்றம் அது விதிக்கும் வேறு எத்தண்டனையோடு கறுவாப்பட்டைக்குப் புகையூட்டுதல்பற்றிய இத்துணைவிதிகளில் எதனையும் மீறியதாக இருமுறையோ அல்லது ஒரு முறையோ குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட உத்தரவுப்பத்திரகாரருடைய உத்தரவுப்பத்திரத்தை வழக்கழித்து விடுதலும் சட்டபூர்வமானதாகும்; அங்ஙனம் வழக்கழிக்கப்பட்டமைக்காக உத்தரவுப்பத்திரகாரர் எவ்வித நஷ்டஈடும் பெறுதற்கு அருகதைபெற மாட்டார்.

18. இத்துணைவிதிகளில்—

"கறுவாப்புபட்டைக்குப் புகையூட்டுதல்" என்பது பதம்படுத்தப்பட்ட கறுவாப்பட்டைக்குக் கெந்தகப் புகையடித்தல் எனப்பொருள்படும்.

5-369—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

# நானுவித அறிவித்தல்கள்

## பண்டத்தரிப்பு பட்டண சபை

### 1970 ம் ஆண்டுக்குரிய சோலைவரி இடாப்புகள்

(252 ம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 235 (1) ம் பிரிவின்படியும், (256 ம் அத்தியாயமான) பட்டண சபைக் கட்டளைச் சட்டத்தின் 165 ம் பிரிவின்படியும், பண்டத்தரிப்பு பட்டண சபை 1970 ம் ஆண்டிற்குரிய சோலைவரி இடாப்புகள் தற்பொழுது தயாராக வுள்ளன என்பதையும், அவை அலுவலக நேரங்களில் பொதுமக்கள் பார்வைக்காக பட்டண சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், இத்தால் அறியத் தரப்படுகிறது.

ஜே. சூசைப்பிள்ளை,
தலைவருக்காக,
பட்டண சபை, பண்டத்தரிப்பு.

பட்டண சபை அலுவலகம்,
பண்டத்தரிப்பு,
1970 ம் ஆண்டு மே மீ 2 ந் உ.

5-193—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.**

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புவதற் பொருட்டு விளம்பரதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்களை தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் .. | 3.4.70 | வெள்ளி .. | 25.3.70 | புதன் .. | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி .. | 3.4.70 | வெள்ளி . | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி .. | 8.4.70 | புதன் .. | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி .. | 17.4.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் .. | 23.4.70 | வியாழன் .. | பி. ப. 3.30 |
| மே .. | 8.5.70 | வெள்ளி .. | 30.4.70 | வியாழன் .. | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி .. | 8.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி .. | 15.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி .. | 22.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| யூன் .. | 5.6.70 | வெள்ளி .. | 29.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் .. | 5.6.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் .. | 11.6.70 | வியாழன் .. | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் .. | 18.6.70 | வியாழன் .. | ந. ப. 12.00 |

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
1970 ஆம் ௵ மார்ச் ௴ 5 ஆந் ௳.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.